<u>சுருக்கம்</u>

பொதுப்பணிகள் – கல்லூரிக் கல்வி – தமிழ்நாடு அமைச்சுப் பணி – கருணை அடிப்படையில் பணிநியமனம் – சென்னை மண்டலக் கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் அலுவலகம் – இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து வரும் திருமதி. சு. அர்ச்சனா என்பவரின் பணியினை வரன்முறை செய்தல் – ஆணைகள் – வெளியிடப்படுகிறது.

---

உயர்கல்வி (ஜி2) துறை

அரசாணை (2டி) எண்.28

நாள். 09.11.2020.
சார்வரி வருடம், ஐப்பசி– 24
திருவள்ளுவர் ஆண்டு 2051

படிக்கப்பட்டது:–

கல்லூரிக் கல்வி இயக்குநரின் கடித ந.க.எண்.28745/பி1/2019,
நாள் 07.03.2020.

* * * * *

<u>ஆணை:–</u>

மேலே படிக்கப்பட்ட கல்லூரிக் கல்வி இயக்குநரின் கடிதத்தில் கடலூர், பெரியார் கலைக் கல்லூரியில் பண்டக காப்பாளராக பணிபுரிந்து வந்தபோது 08.03.2014 அன்று இயற்கை எய்திய திரு.எஸ்.சுகுமாறன், என்பவரது வாரிசுதாரர் திருமணமான மகள் திருமதி. எஸ். அர்ச்சனா என்பவர் தனக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்குமாறு கோரி 04.02.2015 அன்று விண்ணப்பித்த விண்ணப்பம் கல்லூரி முதல்வரது கடிதத்துடன் பெறப்பட்டது என்றும் அன்னாரது விண்ணப்பத்தினை அரசாணை எண்.165, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 30.08.2010ல் வழங்கப்பட்டுள்ள தெளிவுரைகளின்படி பரிசீலனை செய்யப்பட்டதில் திருமதி. எஸ். அர்ச்சனா என்பவர் திருமணமானவர் என்பதால் அன்னாரது விண்ணப்பம் நிராகரித்து ஆணை வழங்கப்பட்டது எனவும் இதனை தொடர்ந்து அன்னார் இவ்வாணையினை இரத்து செய்து தனக்கு பணி நியமனம் வழங்குமாறு சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடர்ந்த நீதிப்பேராணை மனு எண்.36515/2015 நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்த நிலையில் அரசாணை (நிலை) எண்.78, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள் 21.04.2017–ல், பணியிடையே மரணமடைந்த அரசு ஊழியர்களின் திருமணமான பெண் வாரிசுதாரர்களுக்கும் கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்குவது தொடர்பாக அரசால் அரசாணை வெளியிடப்பட்டுள்ளது எனவும், இவ்வரசாணையின் பத்தி எண்.9.2–இல் பின்வருமாறு தெளிவுரை வழங்கப்பட்டுள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

“இறந்த அரசு ஊழியரின் திருமணமான பெண் வாரிசுதாரர்களின் கருணை அடிப்படையிலான பணி நியமனக் கோரிக்கை மனு, உரிய மூன்றாண்டு காலத்திற்குள் வழங்கப்பட்டு, நிராகரிக்கப்பட்டிருப்பின் அதன் மீது நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்து நிலுவையில் உள்ள இனங்களையும், அவ்வாறு நிராகரிக்கப்பட்டு, நீதிமன்றம் செல்லாமல் அரசு அலுவலகங்களில் மேல்முறையீடு நிலுவையில் இருக்கும் இனங்களையும் கருணை

Scanned with CamScanner

அடிப்படையிலான பணி நியமனத்திற்குரிய அனைத்து தகுதிகளையும் நிறைவு செய்யும் பட்சத்தில் பணி நியமனம் வழங்க பரிசீலனை செய்யலாம்''.

2. மேலும் அன்னார் தொடர்ந்த வழக்கில் 29.08.2017 அன்று வழங்கப்பட்டத் தீர்ப்பாணை மற்றும் அரசாணை (நிலை) எண்.78, தொழில் மற்றும் வேலைவாய்ப்பு (க்யு–1)த் துறை நாள்.21.04.2017 ஆகியவற்றின் அடிப்படையில் கருணை அடிப்படையில் பணி நியமனம் கோரிய தனியரின் விண்ணப்பம் பரிசீலிக்கப்பட்டு, திருமதி. சு. அர்ச்சனா என்பாருக்கு சென்னை மண்டலக் கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் அலுவலகத்தில் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பணி நியமனம் வழங்கப்பட்டு தனியர் 01.02.2018 முற்பகல் முதல் பணியாற்றி வருகிறார் என்றும், அன்னார் பணி நியமனத்தின்போது எஸ்.எஸ்.எல்.சி தேர்ச்சி பெற்றுள்ளதாலும், இளநிலை உதவியாளர் பதவிக்குரிய முழுத்தகுதி பெற்றுள்ளதாலும், உரிய வயதினை நிறைவு செய்துள்ளதாலும், அன்னாரின் பணி நியமனத்திற்கோ, வயதுவரம்பிற்கோ விதித் தளர்வாணைகள் பெற வேண்டிய நிலை எழவில்லை எனவும், எனவே, திருமதி. சு. அர்ச்சனா என்பாரின் இளநிலை உதவியாளர் பணியினை 01.02.2018 முதல் வரன்முறை செய்து ஆணை வழங்குமாறு கல்லூரி கல்வி இயக்குநர் அரசை கேட்டுக்கொண்டுள்ளார்.

3. கல்லூரிக் கல்வி இயக்குநரின் கருத்துருவினை அரசு நன்கு ஆய்வு செய்து தமிழ்நாடு அமைச்சுப்பணியில் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக, சென்னை மண்டலக் கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் அலுவலகத்தில் பணிபுரியும் திருமதி. சு. அர்ச்சனா, என்பவரின் பணியினை 01.02.2018 முற்பகல் முதல் வரன்முறை செய்வதற்கு ஏதுவாக தனியர் சார்பாக தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016, பிரிவு 58ன் கீழ் ஆளுநர் அவர்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின்படி அச்சட்டப்பிரிவுகள் 15 (திருமணமான பெண் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணி வழங்குதல்) மற்றும் பிரிவு 28(2) (முன் தேதியிட்டு பணப்பயன் வழங்குதல்) ஆகியவற்றை தளர்வு செய்து தனியர் பணியில் சேர்ந்த நாளான 01.02.2018 முற்பகல் முதல் பணப்பயன் வழங்க அரசு ஆணையிடுகிறது.

4. இவ்வரசாணை தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் அ.சா.கு.எண்.11444/ட்டி1/2020, நாள் 11.09.2020 மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத்துறையின் அ.சா.கு.எண்.22698/ஜி2/2020, நாள் 21.09.2020ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

அபூர்வா
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்

கல்லூரிக் கல்வி இயக்குநர் (மு.கூ.பொ), சென்னை-6.
✓சம்பந்தப்பட்ட தனியர் (கல்லூரிக் கல்வி இயக்குநர் (மு.கூ.பொ) வழியாக)
சம்பந்தப்பட்ட கருவூல அலுவலர்.

நகல்

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (ட்டி1) துறை, சென்னை – 9.
பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்த (ஜி2)த் துறை, சென்னை -9.
அரசு முதன்மைச் செயலாளரின் நேர்முக உதவியாளர், உயர்கல்வித்துறை, சென்னை–9.
இகோ/உதிரி

ந.க.எண். 353/அ1/2021, நாள். 01.2021

நகல் அனுப்பப்படுகிறது.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பெறுநர்

சு. அர்ச்சனா, இ.நி.உ
கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் அலுவலகம்
சென்னை மண்டலம், சென்னை-15.

[signature] 11/1/2021

மே. சுதா
பிரிவு அலுவலர்.
9/1/2021

கல்லூரிக் கல்வி இணை இயக்குநர்
சென்னை மண்டலம், சென்னை - 600 015

Scanned with CamScanner